முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1538

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.12.2023, வெள்ளிக்கிழமை

1. பரபிரம்ம ஆனந்த சொரூபமே
   பாருலகில் சதுர்வேத சக்திகளாக
   வரம்பெற்று இந்த கலியுகத்தை வெல்ல
   வள்ளலாக வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 29 ம் நாள், 15.12.2023, வெள்ளிக்கிழமை)
   அறமாக அரங்கன் நீ செய்து வரும்
   ஆற்றல்மிக்க சேவைதான் உலகிலே
3. மாற்றம் புரிகின்ற மகா வழிமுறையாகும்
   மக்களெல்லாம் இணைந்து உன் தொடர்பு கூடி
   கூடியே என்னருள் பட இந்த உலகினில்
   குருஅரங்கன் வழிகாட்டலில் ஞானியாக
4. உருமாறி இனிதே அற்புதத்தை
   உலகமெங்கும் ஞானவழி படைக்க நேரும்
   நேர்மைகொண்டு உன் தர்மத்தை ஏற்று
   நிலவுலகில் நீ தருகின்ற உபதேசமாம்
5. பெருமைமிக்க உயிர்கொலை நீக்கி
   பேருலகில் ஞானம் பயின்றால்
   பயின்றவர்கள் ஞானியாவது இந்த கலியினில்
   பழுதின்றி உன் அவதாரத்தால் உறுதிஉறுதி
6. உறுதி தந்து ஆறுமுகன் யான்
   உன்னோடு இணைந்து மகா தவவேள்வி போலே
   சிந்தைபட உலகோர்க்கு உன் தீட்சை வழி பலத்தை
   செப்பிடுவேன் வழங்கி காத்துவர

7. வருகவே உலகோர் உன் தொடர்பு கூட்டி
வையகத்தில் எங்கும் தர்மம் செய்துவந்தால்
பெருமைபட ஆறுமுகன் யான் அவர்களைத் தேடி
புகலுவேன் பிரணவ சித்திமிகு ஆற்றலை வழங்கி
8. வழங்கி அவர்கள் தர்மம் காப்பதோடு
வழிவழி அவர்களுக்கு தொடர்பு கூட்டி உதவி வருகின்ற
தருகின்ற குணம் கொண்ட அனைவருக்கும்
தக்கபடி வேலவன் யான் காட்சி தந்து
9. தந்துமே இந்த பேருலகில்
தவதர்ம ஞானபலம் மிக்க
உண்மை நிறைந்த ஞானவான்களை உருவாக்கி
உலகமெங்கும் மாற்றம் புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–